மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு கோருரிமை தீர்ப்பாயம், கும்பகோணம்

(கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கும்பகோணம்)

முன்னிலை - **திரு. G. மணிகண்டராஜா, பி.ஏ., பி.எல்.,**

தீர்ப்பாய நீதிபதி (கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி)

கும்பகோணம்

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் தேதி வியாழக்கிழமை

**எம்.சி.ஓ.பி எண். 104/2023**

**CNR No.TNTJ190001002025**

செல்லப்பன், த/பெ. சிங்காரவேல், க.நெ. 41, வடக்குத்தெரு,
செருகுடி, கல்லூர் அஞ்சல், கும்பகோணம் தாலுக்கா. .....மனுதாரர்

-எதிர்-

1. தினேஷ்குமார், த/பெ. பாலசுப்பிரமணியன், நெ. 19 பி/19 டி,
காலசந்திகட்டளை தெரு, கும்பகோணம் தாலுக்கா.
2. கார்த்தி, த/பெ. முருகானந்தம், நெ. 131, அக்ரஹாரம்,
திருநல்லூர், தேவனாஞ்சேரி அஞ்சல், கும்பகோணம் தாலுக்கா. .....எதிர்மனுதாரர்கள்

இம்மனு இன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G. தமிழ்செல்வன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சங்கர் அவர்கள் எதிருரை தாக்கல் செய்தும், ம.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்ய தவறியதால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டும், 2ம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பியும் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

மனுதாரருக்கு 18.03.2022 ஆம் தேதி விபத்தினால் ஏற்பட்ட கொடுங்காயங்களுக்காக ரூ.12,00,000/- வட்டியுடன் இழப்பீடு கோரி மோட்டார் வாகன சட்டம் 1988 பிரிவு 166 -ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம்**:

மனுதாரர் கடந்த 18.03.2022 அன்று இரவு சுமார் 8.30 மணியளவில் கோவிலாச்சேரியில் இருந்து தனது வீட்டிற்கு திருநல்லூர் சாலையில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி கல்லூர் மணிக்குளம் தெரு வாட்டர் டேங்க் அருகில் சைக்கிளை தள்ளிக்கொண்டு நடந்து சென்று கொண்டிருந்த போது அதே சாலையில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்த 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN-68-A-5078 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக் குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து மனுதாரர் மீது பயங்கரமாக மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார். மேற்படி விபத்தில் இருசக்கர வாகனம் மோதி தூக்கி எறியப்பட்டு மனுதாரருக்கு இடதுகால் முட்டிக்கு கீழ் பாதத்திற்கு மேல் எலும்பு முறிவு, இடது கை தோள்பட்டை, இடதுகை முட்டி, வலது கை முட்டியில் காயம் மற்றும் உடல் முழுவதும் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டு கும்பகோணம் அன்பு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 04.04.2022 முதல் 15.04.2022 வரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டுள்ளார். மேற்படி விபத்தில் சம்மந்தப்பட்ட TN-68-A-5078 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை ஓட்டிவந்த அதன் ஓட்டுநர் மீது சோழபுரம் காவல் நிலைய குற்ற எண்.170/2022 இ.த.ச. சட்ட பிரிவுகள் 279, 337-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்திற்கு காரணம் 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் அதிவேகம், அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவே ஆகும். 2ம் எதிர்மனுதாரர் விபத்தின் போது ஓட்டிய வாகனம் 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது. எனவே, எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ அல்லது தனித்தோ மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளார்கள்.

3) **<u>2 ஆம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>**:

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கு நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயங்களை அவர் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். 1ம் எதிர்மனுதாரர் தனது இருசக்கர வாகனத்தை கடந்த 18.03.2019 அன்று கும்பகோணம் தாலுக்கா, காவேரி சந்து, மேட்டுத்தெரு, க.எண். 4-5 என்ற முகவரியில் வசித்து வரும் மூக்கையன் மகன் வீரமணி என்பவரிடம் கும்பகோணம் பழைய பேருந்து நிலையத்தில் இயங்கி வரும் ராம்ராஜ் கன்சல்டிங் மூலம் ரூ.6500/- க்கு விற்பனை செய்து விட்டார். 1ம் எதிர்மனுதாரர் தான் தனது இருசக்கர வாகனத்தை விற்பனை செய்ததை கும்பகோணம் வட்டார போக்குவரத்து அலுவலருக்கும் தெரிவித்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர் தனது இருசக்கர வாகனத்தை விற்பனை செய்யும் போது காப்பீடு பாலிசி அமலில் இருந்துள்ளது. 1ம் எதிர்மனுதாரர் விபத்திற்கு முன்பே விற்பனை செய்து விட்டதால் 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எந்த இழப்பீட்டு தொகையும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல. மனுதாரருக்கு இழப்பீடு ஏதும் கிடைக்க வேண்டியிருந்தால் அதனை 2ம் எதிர்மனுதாரரே கொடுக்க கடமைப்பட்டுள்ளார். மனுதாரரின் தொழில் மற்றும் வருமானம் ஆகியவற்றை நிரூபிக்கும் வண்ணம் சாட்சி, சான்றாவணங்களை முன்னிடவில்லை. மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மிகவும் அதிகம். இம்மனு 1ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

4) **<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11, நீ.ம.சா.ஆ.1 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்து பின் ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**5) <u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்</u>**:

| | |
|---|---|
| 1) | யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது? |
| 2) | மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் யார்? |
| 3) | மனுதாரருக்கு கிடைக்ககூடிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு? |

**6) <u>பிரச்சனை எண்.1 ற்கான தீர்வு:</u>**

(i) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, சாட்சி, சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் கடந்த 18.03.2022 அன்று இரவு சுமார் 8.30 மணியளவில் கோவிலாச்சேரியில் இருந்து தனது வீட்டிற்கு திருநல்லூர் சாலையில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி கல்லூர் மணிக்குளம் தெரு வாட்டர் டேங்க் அருகில் சைக்கிளை தள்ளிக் கொண்டு நடந்து சென்று கொண்டிருந்த போது அதே சாலையில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்த 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN-68-A-5078 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக் குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் ஒட்டி வந்து மனுதாரர் மீது பயங்கரமாக மோதியதில் மனுதாரருக்கு இடதுகால் முட்டிக்கு கீழ் பாதத்திற்கு மேல் எலும்பு முறிவு, இடது கை தோள்பட்டை, இடதுகை முட்டி, வலது கை முட்டியில் காயம் மற்றும் உடல் முழுவதும் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டு கும்பகோணம் அன்பு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 04.04.2022 முதல் 15.04.2022 வரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டுள்ளார் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆகவும் விசாரணை செய்யப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11 வரையான ஆவணங்கள் மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வாகனத்தை ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக மனுதாரர் புகார் கொடுத்து, புகாரின் அடிப்படையில் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை 2 ம் எதிர்மனுதாரர் மீது பதிவு செய்யப்பட்டு ம.சா.ஆ.8 குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்தானது 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்பது ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை மற்றும் ம.சா.ஆ.8 குற்ற இறுதி அறிக்கை மூலம் தெரியவருகிறது. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வாகனத்தை ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக மனுவில் குறிப்பிட்டு அதனை ஒத்துரைத்து மனுதாரர் ம.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் விபத்தில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனத்தை விபத்திற்கு முன்பே விற்பனை செய்து விட்டதாகவும், தான் விற்பனை செய்த போது மேற்படி வாகனத்திற்கு காப்பீடு பாலிசி இருந்ததாகவும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனினும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி சங்கதிகளை நிரூபிக்கும் வண்ணம் தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் உரிமையாளர் என்று ம.சா.ஆ.3 மோட்டார் வாகன ஆய்வறிக்கையிலும், ம.சா.ஆ.4 வாகன பதிவு சான்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு தனது வாகனத்தை விற்பனை செய்தது குறித்து அறிவிப்பு அனுப்பியதாக குறிப்பிட்டு இருப்பினும் அது தொடர்பாக ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. வாகனத்தை விற்றதாக சொல்லும் பட்சத்தில் கிரயம் பெற்றவரின் பெயரில் வாகனத்தின் பதிவு மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளை 1ம் எதிர்மனுதாரர் மேற்கொண்டு இருக்க வேண்டும். அவ்வாறு எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யாத பட்சத்தில் 1ம் எதிர்மனுதாரரே

மேற்கண்ட வாகனத்தின் உரிமையாளர் ஆவார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் விபத்தை நேரில் பார்த்த சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை.

(iii) விபத்தை நேரில் பார்த்த மற்றும் பாதிப்பிற்குண்டான ம.சா.1 தமது சாட்சியத்தில், 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வாகனத்தை ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக சாட்சியம் அளித்து அதன் சங்கதிகள் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை மற்றும் ம.சா.ஆ.8 குற்ற இறுதி அறிக்கையில் உள்ள சங்கதிகளுடன் ஒத்துரைப்பதாலும், அதனை மறுத்து விபத்தை நேரில் பார்த்த தனது தரப்பு சாட்சிகளை எதிர்மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்காததாலும், 1ம் எதிர்மனுதாரின் ஓட்டுநர் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வாகனத்தை ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. இவ்வாறு பிரச்சனை எண்.1 க்கு தீர்வு காணப்படுகிறது.

**7) <u>பிரச்சனை எண். 2-ற்கான தீர்வு</u>:**

(i) மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் யார் என்பது தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும். 2ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் அஜாக்கிரதையாலும், கவனக் குறைவாலும் விபத்து ஏற்பட்டது என்றும், 2 ம் எதிர்மனுதாரர் விபத்தை ஏற்படுத்திய ஓட்டுநர் என்றும், 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் உரிமையாளர் என்றும், எதிர்மனுதாரர்கள் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளார் என்றும் மனுதாரர் தரப்பில் வாதம் முன் வைக்கப்பட்டது. விபத்தில் சம்பந்தப்பட்ட TN-68-A-5078 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் வாகனத்தின் உரிமையாளர் பெயர் தினேஷ்குமார் (1ம் எதிர்மனுதாரர்) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், விபத்து சமயத்தில் வாகனத்தை ஓட்டியவர் 2 ம் எதிர்மனுதாரர் கார்த்தி என்றும், விபத்தில் சமயத்தில் மேற்படி வாகனத்திற்கு

காப்பீடு இல்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(iii) ம.சா.ஆ.3 / மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பரிசீலனை செய்கையில் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரான 2ம் எதிர்மனுதாரருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் உள்ளதாக தெரியவருகிறது. மேற்கண்ட விபத்தானது 2ம் எதிர்மனுதாரரின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் நிகழ்ந்துள்ளதாக மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் உரிமையாளர் என்ற அடிப்படையிலும், 2ம் எதிர்மனுதாரர் தவறு இழைத்தவர் என்ற அடிப்படையிலும், வாகனத்திற்கு விபத்தின் போது காப்பீடு பாலிசி இல்லாததாலும், மனுதாரருக்குரிய இழப்பீட்டு தொகையை 1, 2 எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவோ, கூட்டாவோ வழங்க கடமைப்பட்டுள்ளார்கள் என பிரச்சனை எண்.2-ற்கு தீர்வு காணப்படுகிறது.

8) <u>**பிரச்சனை எண்.3-ற்கான தீர்வு:**</u>

விபத்து சமயத்தில் மனுதாரர் விவசாய வேலை செய்து மாதம் ரூ.9,000/- சம்பாதித்து வந்துள்ளார் என்று மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்திலும் கூறப்பட்டுள்ளது. விபத்தினால் மனுதாரருக்கு இடதுகால் முட்டிக்கு கீழ் பாதத்திற்கு மேல் எலும்பு முறிவு, இடது கை தோள்பட்டை, இடதுகை முட்டி, வலது கை முட்டியில் காயம் மற்றும் உடல் முழுவதும் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டு கும்பகோணம் அன்பு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 19.03.2022 முதல் 15.04.2022 வரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பது ம.சா.ஆ.2 விடுவிப்பு சான்று மற்றும் ம.சா.ஆ.7 காயச்சான்றின் மூலம் அறியமுடிகிறது.

**9) <u>கொடுங்காயத்திற்கான இழப்பீடு</u>**

மருத்துவ குழுமம் மனுதாரரை பரிசோதித்து வழங்கிய இயலாமை சான்று நீ.ம.சா.ஆ.1ல் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள ஊன விழுக்காடு 27% என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயங்களுக்காக இயலாமையாக 27 சதவீதம் நிர்ணயிக்கப்படுகிறது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற M. Revanth kumar Vs. Sun-X-Concrete India Pvt.Ltd., 2025(2)TNMAC 181 dated 10.01.2025 என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட முன் தீர்ப்பு நெறியை பின்பற்றி 1 சதவீத ஊனத்திற்கு ரூ.10,000/- நிர்ணயித்தால் சரியானதாக இருக்கும் என தீர்மானிக்கப்படுகிறது. மேற்கண்ட தீர்ப்பு இவ்வழக்கிற்கு பொருந்தும் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. எனவே நிரந்தர இயலாமைக்கான இழப்பீடு 27 X 10,000 = ரூ.2,70,000/- என நிர்ணயிக்கப்படுகிறது.

**10) <u>வலி மற்றும் துன்பம்</u>**

விபத்தினால் மனுதாரருக்கு இடதுகால் முட்டிக்கு கீழ் பாதத்திற்கு மேல் எலும்பு முறிவு, இடது கை தோள்பட்டை, இடதுகை முட்டி, வலது கை முட்டியில் காயம் மற்றும் உடல் முழுவதும் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டுள்ளதாக ம.சா.ஆ.2 விடுவிப்பு சான்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, வலி மற்றும் துன்பம் அதிகமாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே வலி மற்றும் துன்பத்திற்கு ரூ.40,000/- (ரூபாய் நாற்பதாயிரம்) நிர்ணயிக்கப்படுகிறது.

**11) <u>உதவியாளர் செலவு</u>**

விபத்தினால் மனுதாரருக்கு இடதுகால் முட்டிக்கு கீழ் பாதத்திற்கு மேல் எலும்பு முறிவு, இடது கை தோள்பட்டை, இடதுகை முட்டி, வலது கை முட்டியில் காயம் மற்றும் உடல் முழுவதும் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டு அதற்காக 10 நாட்கள் உள்நோயாளியாக

தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு இருப்பதால் அவருக்கு உதவியாளர் தேவைப்படும் என்பதில் ஐயமில்லை. எனவே உதவியாளர் செலவுத் தொகையாக ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம்) நிர்ணயிக்கப்படுகிறது.

12) **ஊட்டச்சத்து உணவு**

மனுதாரருக்கு விபத்தினால் இடதுகால் முட்டிக்கு கீழ் பாதத்திற்கு மேல் எலும்பு முறிவு, இடது கை தோள்பட்டை, இடதுகை முட்டி, வலது கை முட்டியில் காயம் மற்றும் உடல் முழுவதும் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டுள்ளதாக அவருக்கு ஊட்டச்சத்து உணவு தேவைப்படும் என்பதில் ஐயமில்லை. எனவே ஊட்டச்சத்து உணவிற்காக ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம்) நிர்ணயிக்கப்படுகிறது.

13) **போக்குவரத்து செலவு**

மனுதாரருக்கு இடதுகால் முட்டிக்கு கீழ் பாதத்திற்கு மேல் எலும்பு முறிவு, இடது கை தோள்பட்டை, இடதுகை முட்டி, வலது கை முட்டியில் காயம் மற்றும் உடல் முழுவதும் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டுள்ளதாக பல முறை மருத்துவமனைக்கு சென்று வந்திருக்க வேண்டியிருந்திருக்கும். அதனை கருத்தில் கொண்டு போக்குவரத்து செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம்) வழங்கப்படுகிறது.

14) **வசதி இழப்பு**

மனுதாரருக்கு இடதுகால் முட்டிக்கு கீழ் பாதத்திற்கு மேல் எலும்பு முறிவு, இடது கை தோள்பட்டை, இடதுகை முட்டி, வலது கை முட்டியில் காயம் மற்றும் உடல் முழுவதும் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டுள்ளதாக அவருக்கு செயல்திறன் இயலாமை 27

சதவீதம் என்று மருத்துவக்குழுமம் சான்று வழங்கியுள்ளது. மனுதாரருக்கு வசதி குறைவு ஏற்படும் என்பதில் ஐயம் இல்லை. எனவே, வசதி குறைவிற்காக ரூ.50,000/- இழப்பீடாக நிர்ணயிக்கப்படுகிறது.

**15) <u>மருத்துவ செலவு</u>**

மனுதாரர் விபத்தினால் இடதுகால் முட்டிக்கு கீழ் பாதத்திற்கு மேல் எலும்பு முறிவு, இடது கை தோள்பட்டை, இடதுகை முட்டி, வலது கை முட்டியில் காயம் மற்றும் உடல் முழுவதும் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டு மருத்துவ செலவுத் தொகைகளுக்கான ரசீதுகள் ம.சா.ஆ.10, 11 ஆக தாக்கல் செய்யதுள்ளார். அதில் மனுதாரரின் பெயர் குறிப்பிடாத பில்கள் மற்றும் கையால் எழுதப்பட்ட பில்களை பொறுத்து மனுதாரர் இழப்பீடு பெற உரிமையற்றவர் ஆவார். எஞ்சிய ரசீதுகளை பொறுத்து மருத்துவ செலவிற்காக ரூ.49305/- (ரூபாய் நாற்பத்து ஒன்பதாயிரத்து முன்னூற்று ஐந்து) வழங்கப்படுகிறது.

**16) <u>வருமான இழப்பு</u>**

விபத்தினால் மனுதாரருக்கு இடதுகால் முட்டிக்கு கீழ் பாதத்திற்கு மேல் எலும்பு முறிவு, இடது கை தோள்பட்டை, இடதுகை முட்டி, வலது கை முட்டியில் காயம் மற்றும் உடல் முழுவதும் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டுள்ளதாக குறைந்தபட்சம் மூன்று மாதங்கள் மனுதாரர் ஓய்வில் இருந்திருக்க வேண்டியிருக்கும். தனது மாத வருமானம் ரூ.9000/- என்று மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளார். எனவே மனுதாரரின் மாத வருமானமாக ரூ.9,000/- ரூபாய் ஒன்பதாயிரம்) நிர்ணயிக்கப்பட்டு, அந்த மூன்று வருமான இழப்பிற்காக 3 X 9,000 = 27,000/- (ரூபாய் இருபத்து ஏழாயிரம்) என நிர்ணயிக்கப்படுகிறது.

**17) உடைகள் இழப்பிற்கான செலவு**

விபத்தின் போது ஏற்பட்ட உடைகளுக்கான சேத இழப்பீடு ரூ.3,000/- (ரூபாய் மூன்றாயிரம்) என நிர்ணயம் செய்யப்படுகிறது. இதன் அடிப்படையில் கீழ்கண்டவாறு இழப்பீடு தீர்மானிக்கப்படுகிறது.

| வ. எண் | இழப்பீடு தலைப்புகளில் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | கொடுங்காயத்திற்கான இழப்பீடு | 2,70,000/- |
| 2 | வலி மற்றும் துன்பத்திற்காக | 40,000/- |
| 3 | உதவியாளர் செலவிற்காக | 10,000/- |
| 4 | ஊட்டச்சத்து உணவிற்காக | 10,000/- |
| 5 | போக்குவரத்து செலவிற்காக | 10,000/- |
| 6 | வசதி இழப்பிற்காக | 50,000/- |
| 7 | மருத்துவ செலவிற்காக | 49,305/- |
| 8 | வருமான இழப்பிற்காக | 27,000/- |
| 9 | உடைகள் இழப்பிற்காக | 3,000/- |
| | கூடுதல் | 469305/- |

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மனுதாரர் மொத்த இழப்பீடாக ரூ.469305/- (ரூபாய் நான்கு லட்சத்து அறுபத்து ஒன்பதாயிரத்து முந்நூற்று ஐந்து மட்டும்) கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் பிரச்சனை எண்.3-ற்கு தீர்வு காண்கிறது.

1) இறுதியாக, இம்மனு பகுதியாக அதற்குரிய விகிதாச்சார செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

2) எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு ரூ.469305/- (ரூபாய் நான்கு லட்சத்து அறுபத்து ஒன்பதாயிரத்து முந்நூற்று ஐந்து மட்டும்) மற்றும் அதற்குரிய வட்டி மற்றும் செலவுத் தொகையை வழங்க உத்தரவிடப்படுகிறது.

3) இழப்பீட்டுத் தொகையினை மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து ஆண்டிற்கு 7.5% பின் வட்டியும் மற்றும் செலவுத்தொகையும் சேர்த்து எதிர்மனுதாரர்கள் இரண்டு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கி கணக்கில் அதாவது Additional Chief Judicial Magistrate Court, Kumbakonam in MACTOP Account No.179701000009585, I.O.B. Court Branch, Kumbakonam directly by NEFT or RTGS மூலம் வைப்பீடு செய்ய உத்தரவிடப்படுகிறது.

4) மனுதாரர் இந்நீதிமன்றத்தில் அவரது வங்கி கணக்கினை 10 நாட்கள் அவகாசத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

5) மனுதாரருக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகைக்கான குறைவுபடும் நீதிமன்ற கட்டணம் ரூ. 3965 /- ஐ 15 நாட்களுக்குள் செலுத்த உத்தரவிடப்படுகிறது.

6) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் R.O.C. No.390-A/2014/F1 dated 13.02.2014-ல் பிறப்பித்துள்ள உத்தரவுபடி தனியாக தீர்ப்பாணை வனையப்படவில்லை.

| | |
|---|---|
| மனு தாக்கலான நாள் | 30.09.2022, 24.03.2023 |
| மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 29.03.2023 |
| கோரப்பட்டுள்ள இழப்பீட்டு தொகை | ரூ.12,00,000/- |
| வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டு தொகை | ரூ.469305 /- |
| மனுவில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் | ரூ.100/- |
| இழப்பீட்டிற்கான நீதிமன்ற கட்டணம் | ரூ.4065/- |
| மனுதாரர் செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணம் | ரூ.3965 /- |

**செலவுத்தொகை பட்டியல்**:

| தலைப்பு | மனுதாரர் |
|---|---|
| நீதிமன்ற கட்டணம் | ரூ. 4065 /- |
| வக்காலத்து | ரூ.10/- |
| வழக்கறிஞர் ஊதியம் | ரூ.21886/- |
| கூடுதல் | ரூ.25961/- |

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் நாள் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

G. MANIKANDARAJA
Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.04.09 16:15:55 +0530

கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி,
கும்பகோணம்.

| | |
|---|---|
| **மனுதாரர் தரப்பு சாட்சிகள்**: | |
| ம.சா.1 | செல்லப்பன் |
| **மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**: | |
| ம.சா.ஆ.1 | 19.03.2022 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.2 | 15.04.2022 தேதியிட்ட தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கிய விடுவிப்பு சான்று பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.3 | 21.03.2022 தேதியிட்ட 1 ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.4 | TN 68 A 5078 பதிவெண் கொண்ட பேருந்தின் பதிவு சான்று பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.5 | மனுதாரரின் ஆதார் அட்டை நகல் |
| ம.சா.ஆ.6 | 19.03.2022 தேதியிட்ட விபத்து பதிவேடு பதிவிறக்க நகல் |

| | |
|---|---|
| ம.சா.ஆ.7 | 19.03.2022 தேதியிட்ட மருத்துவ சட்ட கருத்துரை பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.8 | 13.07.2023 தேதியிட்ட குற்ற இறுதி அறிக்கை இணையதள நகல் |
| ம.சா.ஆ.9 | மனுதாரருக்கு வழங்கப்பட்ட மருந்து சீட்டுகள் 24 எண்ணிக்கை வரிசை அசல் |
| ம.சா.ஆ.10 | கும்பகோணம் கே.எஸ் மருத்துவமனையில் மனுதாரருக்கு எக்ஸ்ரே எடுத்ததற்காக ரூ.3700/-க்கான செலவு ரசீதுகள் எண்ணிக்கை 6 வரிசை அசல் |
| ம.சா.ஆ.11 | மனுதாரர் சிகிச்சை மேற்கொண்டதற்கான ரூ.63,133.84/-க்கான மருத்துவ செலவு ரசீதுகள் எண்ணிக்கை 66 வரிசை அசல் |
| நீ.ம.சா.ஆ.1 | மருத்துவக்குழுமம் வழங்கிய ஊனச்சான்று. |
| **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் : இல்லை** | |

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.04.09
16:16:04 +0530

கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி,

கும்பகோணம்.